**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 90/2022**

| | | DEPOSITION OF WITNESS | PW.2 |
|---|---|---|---|
| NAME | ராமலிங்கம் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 28.01.2026.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. நான் வாதி மற்றும் பிரதிவாதியின் அண்ணன் என்றால் சரிதான். இருவரும் தம்பி என்றாலும் எனக்கு வாதி மீது தான் அதிக அன்பு என்றால் சின்னவன் நித்தியானந்தம் மீது தான். நான் மின்சார வாரியத்தில் போர்மேனாக இருந்து ஓய்வு பெற்றவன். கஜேந்திரனின் ஒரு மகள் டாக்டராகவும் மகன் இன்ஜினியராகவும் இருக்கிறார்கள் என்றால் மகள் டாக்டர் என தெரியும் மகன் என்ன வேலை செய்கிறார் என்று தெரியாது. இருவரும் வேலை செய்கிறார்கள் என்றால் சரிதான்.

2. நித்தியானந்தத்திற்கு தனிப்பட்ட வருமானம் இருக்கிறதா என்றால் விவசாயத்தில் இருக்கிறது. தற்போது நித்தியானந்தத்தின் மகன் 4, 5 வருடமாக வேலை செய்து வருகிறார். நித்தியானந்தத்திற்கு வேறு தனிப்பட்ட வருமானம் இல்லை என்றால் சரிதான். சொத்து என்ன சர்வே நம்பரில் உள்ளது என தெரியுமா என்றால் தெரியும், சர்வே எண்.1-ல் 12 ஏக்கரா 80 செண்ட் சர்வே எண்.9-ல் 9 ஏக்கரா 80 செண்ட் உள்ளது. எந்த சொத்திற்காக வழக்கு போட்டுள்ளார் என்றால் சர்வே எண்.1-ல் 1 ஏக்கர் 88 செண்ட்டுக்காக, சர்வே எண்.9-ல் 2 ஏக்கர் 40 செண்ட், சர்வே எண்.4/2, சர்வே எண்.5/1 ஆகிய சொத்திற்காக வழக்கு போட்டுள்ளார்.

3. என்னிடம் காட்டப்படும் எனது பிரமாண வாக்குமூலத்தை யார் டைப் செய்து போட்டது என்றால் நித்தியானந்தம் சொல்லி வழக்கறிஞர் தயார் செய்தார் நான் எதுவும் சொல்லவில்லை, எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து எப்போது போட்டது என்றால் சுமார் 15 நாட்களுக்கு முன்பு போட்டது. பிரமாண வாக்குமூலத்தில் என்ன எழுதி உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் படித்து பார்த்தேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி டைப்

செய்யவில்லை என்றால் சரிதான். எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் நான்கு கையெழுத்து போட்டேன். நான் ஆறு கையெழுத்து போட்டேன் என்றாலும் தவறுதலாக நான்கு கையெழுத்து போட்டேன் என சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. சொத்து கிரயம் வாங்கிய தேதியில் நான் இல்லை என்றாலும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தை எனது சாட்சி கையெழுத்து இல்லை என்றால் சரிதான். எனக்கு எந்த விவரமும் தெரியாது என்றாலும் சாட்சி கையெழுத்து போட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த கிரய பத்திரம் எவ்வளவு ரூபாய் எத்தனை பத்திரம் வாங்கினார்கள் என்றால் 9 பத்திரம் வாங்கினார்கள், 1–1/4 லட்சத்திற்கு வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரயப்பத்திரத்தில் எத்தனை தாள்கள் உள்ளது என்றால் 15 தாள்கள் உள்ளது. எனக்கு கிரயம் வாங்கிய விவரமும் தாவா விவரமும் தெரியாது என்றால் சரியல்ல.

5. வாதி மற்றும் பிரதிவாதி என்ன விஸ்தீரணம் அனுபவிக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது என்றாலும் தாவா சொத்தின் விஸ்தீரணம் என்ன என்று எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் சர்வே எண்.5/2 என ஒரு சொத்து இல்லை என்றாலும் இதில் இருந்தே தாவா பற்றி எந்த விவரமும் எனக்கு தெரியவில்லை என எனக்கு தெரியவருகிறது என்றால் சரியல்ல. எனக்கு ஒவ்வொரு சொத்திற்கும் தனித்தனியாக செக்குபந்தி சொல்ல முடியுமா என்றால் முடியாது. தாவா சொத்து ஆரம்பத்தில் யாருக்கு பாத்தியப்பட்டது என எனக்கு தெரியாது என்றால் வெங்கடேசன் செட்டிக்கு பாத்தியப்பட்ட சொத்து. வெங்கடேச செட்டிக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் அண்ணன் தம்பிகள் இரண்டு பேரும் பாகம் பிரித்துக்கொண்ட பத்திரம் உள்ளது. அவர்கள் 1977, 1978–ல் பாகம் பிரித்து கொண்டார்கள்.

6. சொத்து தொடர்பாக கஜேந்திரன் ஏற்கனவே வழக்கு போட்டுள்ளாரா என்றால் நித்தியானந்தம் மீது 2014–ல் வழக்கு போட்டுள்ளார். சர்வே எண்.1, சர்வே எண்.9 தொடர்பாக வழக்கு போட்டார். இதே தாவா சொத்திற்காக அந்த வழக்கை போட்டார் என்றால் ஆமாம். அதில் நித்தியானந்தம் வக்கீல் வைத்து பதில் போட்டாரா என்றால் போட்டார். அந்த பதிலில் நித்தியானந்தம் என்ன போட்டுள்ளார் என தெரியுமா என்றால் தெரியாது. கஜேந்திரன் வங்கி கடன் வாங்கியுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். மொத்த கடனையும் அவர் தான் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல, டிராக்டருக்காக கடன் வாங்கினோம் டிராக்டரை விற்று கடனை கட்டினோம். நான் சொல்வது

தவறு என்றாலும் மொத்த கடனையும் அவர் தான் கட்டினார் என்றால் சரியல்ல.

7. நித்தியானந்தத்திற்கு சொத்து வாங்க தகுதி இல்லை என்றாலும் கஜேந்திரன் தாவா சொத்தை வாங்கினார் என்றால் சரியல்ல நாங்கள் மூன்று பேரும் எனது அப்பாவிடம் இருந்து பணம் கொடுத்து அவர் வாங்கி கொடுத்தார். நான் சொல்வது தவறு என்றாலும் அதுபோல் நடக்கவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே சொத்து தொடர்பாக சத்தியமூர்த்தி என்பவர் வழக்கு போட்டுள்ளாரா என்றால் கஜேந்திரன், நித்தியானந்தம், ராமலிங்கம், ரகுபதி மற்றும் கமலநாதன் மீது வழக்கு போட்டுள்ளார். வெங்கடேசன் வாரிசு மீது அந்த வழக்கை போட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கு எண். ஓ.எஸ்.320/1996 என்றால் ஞாபகமில்லை.

8. அந்த வழக்கில் அவர் வெற்றி பெற்று சொத்தை சுவாதீனம் எடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. அவர் சுவாதீனம் எடுத்தது நிறைவேற்று மனு எண்.54/2019 என்றால் சரியல்ல, வந்து அளந்தார்கள் சுவாதீனம் கொடுக்கவில்லை எங்களிடம் தான் உள்ளது. சுவாதீனம் எடுத்துவிட்டு அவமதிப்பு மனு 01/2023 போட்டுள்ளார்களா என்றால் போட்டுள்ளார்கள். சுவாதீனம் எடுக்காமல் அவமதிப்பு மனு போட முடியாது என்றாலும் சுவாதீனத்தை எடுக்கவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த அவமதிப்பு மனுவில் நித்தியானந்தம், ராமலிங்கம், ரகுபதி மற்றும் கமலநாதன் ஆகிய நாங்கள் பதில் இல்லை என சொல்லியுள்ளோம் என்றால் எனது மகன்களுக்கு தான் தெரியும்.

9. கஜேந்திரன் தான் தனியாக வக்கீல் வைத்து நடத்துகிறார் என்றால் அவர் தனியாக வைத்துள்ளார் நாங்கள் தனியாக வைத்துள்ளோம். நாங்கள் தனியாக வக்கீல் வைக்கவில்லை என்றால் சரியல்ல. சொத்தை அனுபவிக்கிறார் என்றால் அடங்கல் வரும் என்றால் சரிதான். வாதி சொத்து வாங்கியதில் இருந்து இன்றுவரை என்ன பயிர் வைத்துள்ளார் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான் பயிர் வைத்துள்ளார். அவர் பயிர் வைக்கவில்லை என்றாலும் அதனால் என்னால் சொல்ல முடியாது என்றால் சரியல்ல. ஒருவர் சொத்தை அனுபவிக்காத நிலையில் அனுபவித்ததாக நீதிமன்றத்தில் சொல்ல முடியாது என்றாலும் நான் வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றாலும் தாவா சொத்தின் விவரங்கள் தெரியாது என்றாலும் வாதிக்காக பவ்வியப்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. வாதி தற்போது எங்கு உள்ளார் என்றால் மூங்கம்பட்டில் இருக்கிறார். குடும்ப அட்டை, ஆதார் தாக்கல் செய்தால் தான் தெரியவரும் என்றால் சரிதான். வாதி மூங்கம்பட்டில் இல்லை என்றாலும் என்னுடன் மோடிகுப்பத்தில் உள்ளார் என்றால் சரியல்ல நான் மட்டும் தான் உள்ளேன். ஏற்கனவே தாவா சொத்தை பொறுத்து இதே நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது வாதி எந்த பரிகாரமும் கோரமுடியாது என்றாலும் அவருக்கு தாவா தாக்கல் செய்ய முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. அந்த வழக்கை கஜேந்திரன் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வைத்து நடத்துகிறார் என்றால் அவருக்காக அவர் நடத்துகிறார். நாங்கள் நடத்தவில்லை. கீழ் கோர்ட்டில் மட்டும் நடத்துகிறோம்.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.